
# சத்தியம் உங்களை இவற்றிலிருந்து விடுதலையாக்கும்



ப்ரின்ட்லேன்ட் பப்லிஷர்ஸ்

லைனஸ் மற்றும் சூசன் டேனியேல்

To Subscribe to this magazine Free of Cost:

**In Sri Lanka**
*Write to:*
The Christadelphians,
P.O. Box 60,
Negombo - 11500,
SRI LANKA.

**In India**
*Write to:*
The Christadelphians,
P.O. Box 4237
Bangalore 560-042
India



# புது சிருஷ்டி

சத்தியத்தையும் அறிவீர்கள். சத்தியம் உங்களை விடுதலையாக்கும்

இதழ் 44

- முழு அர்ப்பணிப்பு
- கொரிந்துவிலுள்ள சபை
- எலும்பைப் பற்றி....
- பாம்புகடித்தபின் பிழைத்தெழுவது எப்படி ?
- வினாவிடை
- வாசித்துச் சிந்தித்தல்

# Issue 44

- முழு அர்ப்பணிப்பு
- கொரிந்துவிலுள்ள சபை
- எலும்பைப் பற்றி....
- பாம்புகடித்தபின் பிழைத்தெழுவது எப்படி ?
- வினாவிடை
- வாசித்துச் சிந்தித்தல்

### கிறிஸ்டடெல்ஃபியர்கள் யார் ?

கிறிஸ்டடெல்ஃபியன்ஸ் (Christadelphians) என்ற பதம் கிரேக்க மூலமொழிகளாகிய Christ மற்றும் adelphos என்ற பதங்களிலிருந்து உருவானது. இதன் அர்த்தம் "கிறிஸ்துவில் சகோதரர்" என்பதாகும். கிறிஸ்டடெல்ஃபியன்ஸ் என்ற உலகளாவிய கிறிஸ்தவ சமுதாயம் 'வேதாகமத்தில் முழுமையாக நம்பிக்கை வைக்கிற' மக்கள் கூட்டமாகும். வேதவாக்கியங்களெல்லாம் தேவனால் அருளப்பட்டவை என்று உறுதியாக நம்புகிறார்கள்.

நாங்கள், தேவனுடைய (ஒரே பேறான) குமாரனாகிய இயேசு கிறிஸ்து வல்லமையோடு பூமிக்குத் திரும்பி வருவார் என்றும், அவர் வருத்தங்கள், அக்கிரமம், ஆக்கிரமிப்புகளை நீக்கி, தமது ஜனங்களுக்கு நியாயத்தையும், சமாதானத்தையும், நீதியையும் கொண்டு வருவார் என்றும் நம்புகிறோம்.

நாம் மரித்தாலும், மரித்தோரிலிருந்து எழும்பி, நியாயந்தீர்க்கப்படுவோம் என்று நம்புகிறோம். அத்துடன், இப்போது வாழும் வாழ்க்கையில் தன்னயமும் பொல்லாங்கும் நிறைந்து வாழ்ந்தவர்கள் நித்தியத்தில் வாழமுடியாமல் அழிக்கப்படுவார்கள். அதற்கு மாறாக, தேவனுடைய வார்த்தையை நம்பி கீழ்ப்படிந்து ஜீவித்தவர்கள் நித்தியமாக ஜீவித்திருப்பார்கள். மேலும் ஒவ்வொருவரின் வாழ்விலும் இரண்டு முக்கியமானவைகளை நிறைவேற்றியே ஆக வேண்டும் என்று விசுவாசிக்கிறோம். அவைகள் (1) தேவனிடம் முழு இருதயத்துடன் அன்பு கூர வேண்டும். (2) உன்னைப் போல பிறரை நேசிக்க வேண்டும்.


ஒருங்கிணைப்பாளர் : லினஸ் டேனியேல்
**e-mail: linus.daniel@hotmail.com**
http://tamil.icdelph.org/
வேதத்தின் சத்தியத்தை கேளுங்கள்
http// www.choose2live.info/new_creation
இந்தியாவில் இலவச பிரதிக்குத் தொடர்பு முகவரி :
The Christadelphians,
P.O. Box 4237, Bangalore 560-042
India
ஸ்ரீலங்காவில் இலவச பிரதிக்குத் தொடர்பு முகவரி :
**The Christadelphians,**
The Christadelphians,
P.O. Box 60, Negombo - 11500,
SRI LANKA.
Email: slcbm2@sltnet.lk



**புது சிருஷ்டி பதிப்பாளர் குழு**

**லினஸ் டேனியேல் : தலைமை ஒருங்கிணைப்பாளர்**

**திருமதி கிலாடிஸ் சுகிர்தராஜ் தமிழ் மொழிபெயர்ப்பு உதவிகளுக்காக சிறப்பான நன்றி கூறுகிறோம்.**


இந்த பத்திரிகையின் வாயிலாக, வேதவாக்கியங்களை வாசிக்க உங்களைத் தூண்டுவதே எங்கள் குறிக்கோள். இதிலுள்ள கட்டுரைகள் உங்கள் ஆவிக்குரிய வாழ்க்கையில் வளர உற்சாகப்படுத்தும் என நம்புகிறோம். நம்மை இரட்சிப்புக் கேற்ற ஞானமடையச் செய்வதால் வேதாகமத்தைத் தினமும் வாசிக்க உங்களை உற்சாகப்படுத்துகிறோம்.


இந்த பத்திரிகையில் காணப்படும் எல்லா கட்டுரைகளும் அனைத்துலக கிறிஸ்டடெல்ஃபிய வழிமுறை யிலிருந்து தெரிந்தெடுத்து மொழி பெயர்ப்புச் செய்து பிரசுரமாகியுள்ளன.

*"இப்படியிருக்க, ஒருவன் கிறிஸ்துவுக்குள்ளிருந்தால், புது சிருஷ்டியாயிருக்கிறான். பழையவைகள் ஒழிந்துபோயின, எல்லாம் புதிதாயின" (2. கொரிந்தியர் 5:17).*



# முழு அர்ப்பணிப்பு

## (பணித்துளி சிந்தனை)



பாட் ரைலி எனும் புகழ்வாய்ந்த கூடைப்பந்து பயிற்சியாளர், "அர்ப்பணிப்பில் இரு தெரிந்துக் கொள்ளுதல்கள் தான் உள்ளன. ஒன்று நீ உன்னை அர்ப்பணித்திருக்கிறாய், இல்லையென்றால் நீ உன்னை அர்ப்பணிக்கவில்லை. வாழ்க்கையில் 'இரண்டிற்கும் இடைப்பட்டநிலை' என்று ஒன்றில்லை", எனக் கூறினார்.

அவர் சொல்வது சரிதான். கர்த்தரிடத்தில் ''இடைப்பட்டநிலை'' என்று ஒன்றில்லை. ஒன்று நாம் அவருடன் அவருடையவர்களாக இருக்கின்றோம். இல்லையெனில் அவருக்கு விரோதமாக இருக்கிறோம். ஒன்றுநாம் அர்ப்பணிப்புடன் வாழ்க்கிறோம். அல்லது அப்படியில்லாத வாழ்க்கை வாழ்கிறோம். கிறிஸ்து லவோதிக்கேயா சபைக்குக்கீழ்க்கண்டவாறு எழுதுகிறார் : "நீ குளிருமல்ல அனலுமல்ல, நீ குளிராயாவது அனலாயாவது இருந்தால் நலமாயிருக்கும். இப்படி நீ குளிருமின்றி அனலுமின்றி வெதுவெதுப்பாயிருக்கிற படியினால் உன்னை என் வாயினின்று வாந்தி பண்ணிப்போடுவேன்". யாக்கோபும், "சந்தேகப்படுகிறவன் காற்றினால் அடிபட்டு அலைகிற அலைக்கு ஒப்பாயிருக்கிறான். அப்படிப்பட்ட மனுஷன் தான் கர்த்தரிடத்தில் எதையாகிலும் பெறலாமென்று நினையாதிருப்பானாக,"என எச்சரிக்கிறார். சத்தியத்திலே நடக்கிற நாம் பாட் ரைலி கூறுவது போல் நாம் 'உள்ளே' அல்லது 'வெளியே' இருக்கிறோம். நாம் கர்த்தரிடத்தில் இடைப்பட்ட நிலையில் இருக்க முடியாது.

அர்ப்பணிப்பு - இந்நாட்களில் இது மக்கள் மத்தியில் விரும்பதக்கதாகக்

காணப்படுவதில்லை. ஆண்கள் பெண்களின் அநேகர் திருமணம் செய்து கொள்வதைத் தவிர்க்கின்றார்கள். ஏனென்றால், அர்ப்பணிப்புச்செய்ய, அதாவது பொறுப்பேற்றுக்கொள்ள பயப்படுகிறார்கள். தொழிலாளர்களில் அநேகர் அதிக முயற்சியெடுக்காமல், அக்கரையின்றி பணியாற்றுகின்றார்கள். காரணம், ஒரு நல்ல வேலையைச் செய்து முடிக்கவேண்டும் என்ற அர்ப்பணிப்பு - பொறுப்புணர்வு அவர்களிடம் இல்லை, டாக்டர் அந்தோமி காம்பபோலோ இவ்வாறு கூறுகிறார் : "நேற்றோ அதற்கு முன்தினமோ என்ன நடந்திருந்தாலும், அதற்கு மேலாக, எதற்கு உன்னை அர்ப்பணிக்கிறாயோ, அதுவே நீ யார் என்பதைத் தீர்மானிக்கிறது." நீடோகுபேய்ன் என்பார், "ஒரு தீர்மானத்தை விட அர்ப்பணிப்பில் ஆழம் அதிகம். அது நம்மைக் கட்டுப்படுத்துகிறது." என்கிறார்.

கர்த்தர் நம்மை அங்கீகரிக்க வேண்டுமென நாம் விரும்பினால் நாம் ஒவ்வொருவருமே நம் வாழ்க்கையை முழுவதுமாகக் கர்த்தருக்கு அர்ப்பணிக்கத் தீர்மானிக்கவேண்டும். இதே கருத்தை தாவீதும் அவன் குமாரன் சாலொமோனும் வலியுறுத்துகின்றனர். "உன் வழியைக் கர்த்தருக்கு ஒப்புவித்து, அவர்மேல் நம்பிக்கையாயிரு, அவரே காரியத்தை வாய்க்கப்பண்ணுவார்." என தாவீது உரைக்கிறார். சாலொமோனும், "உன் செய்கைகளைக் கர்த்தருக்கு ஒப்புவி. அப்பொழுது உன் யோசனைகள் உறுதிப்படும்", என்கிறான்.

எல்லோருக்கும் தெரிந்த ஒரு மாதிரி உண்டு. அர்ப்பணிப்பு இல்லையெனில் வெற்றி இல்லை. அதிலும் போட்டி நிறைந்த நம் உலகில், அர்ப்பணிப்பு இல்லாமல் நம் எந்த முயற்சியிலும் வெற்றிபெற முடியாது. ஏனெனில் முயற்சி இன்றி வெற்றி வருவதில்லை. பொதுவாக வெற்றி பெறுவதற்கு ஏராளமான முயற்சி தேவைப்படுகிறது. இந்த 'மாதிரி' வாழ்க்கைக்கும் ஏற்றதாயுள்ளது. ஆண்டவருடைய ஆசீர்வாதத்தை நாம் பெற விரும்பினாலும் 'இந்த மாதிரி' தேவைப்படுகிறது. "ஆகையால், எனக்குப் பிரியமான சகோதரரே, கர்த்தருக்குள் நீங்கள் படுகிற பிரயாசம் விருதாவாயிராதென்று அறிந்து, நீங்கள் உறுதிப்பட்டவர்களாயும், அசையாதவர்களாயும், கர்த்தருடைய கிரியையிலே எப்பொழுதும் பெருகுகிறவர்களாயும் இருப்பீர்களாக," என அறிவுறுத்துகின்றார். அதே சமயம் முயற்சி செய்யாதவர்களுக்கு என்ன நடக்கும் என்பதற்குத் தெளிவான எச்சரிப்புகள் உள்ளன. "பிரயோஜனமற்ற ஊழியக்காரனாகிய இவனைப் புறம்பான இருளிலே தள்ளிப் போடுங்கள். அங்கே அழுகையும் பற்கடிப்பும் உண்டாயிருக்கும்".

அப்படியென்றால் ஏன் அநேகர் முக்கியமான காரியங்களில் கவனம் வைக்காமல், எந்த விதமான அர்ப்பணிப்போ, உண்மையான ஒரு இலக்கோ இல்லாமல் வாழ்க்கையில் அங்குமிங்குமாக அலைந்து திரியும் வாழ்க்கை வாழ்கிறார்கள்?



பயம் ஒரு விடையாயிருக்கக்கூடும். ஒருமாபெரும் முன்னேற்றத்திற்கானத் தீர்மானம் எடுத்து முழு அர்ப்பணிப்புடன் செயல்பட மக்கள் தயங்குகிறார்கள். இங்கிலாந்தின் முன்னாள் பிரதமர் டேவிட் லாயிட் ஜார்ஜ், ஒரு சமயம் கூறிய அறிவுரையைக் கேளுங்கள் : "ஒரு பெரிய அடி எடுத்து வைக்க வேண்டுமெனக் காட்டப்பட்டால், அப்படி அடிஎடுத்து வைக்க பயப்படாதேயுங்கள். ஒரு அதலபாதாளத்தை சின்னச் சின்னதாக இரு தாண்டல்களில் தாண்ட முடியாது" முதல் அடி எடுத்துவைக்க தைரியம் தேவைப்படுகிறத. எடி ரீக்கன்பேக்கர் தைரியத்திற்கு ஒரு விளக்கம் கொடுத்தார். "நீ எதைச் செய்ய பயப்படுகிறாயோ, அதைச் செய்வதுதான் தைரியம். நீ பயப்படாவிடில் தைரியமுமில்லை."

நாம் பயப்படுவதை ஆண்டவர் அறிவார். வேதத்தில் உள்ள உண்மையும் உத்தமமுமான அநேகர் பயந்தார்கள் - நாம் அப்படிச் சொல்வதற்குக் காரணம், தேவனே அவர்களிடம் சொல்கிறார். அப்பொழுது தான் மரித்த மோசேயின் இடத்தைத் தான் நிரப்ப முடியுமா? (மோசே செய்த வேலையைத் தான் செய்ய முடியுமா?) என இஸ்ரவேல் புத்திரர் முன் பயந்து நடுங்கி நின்று கொண்டிருந்த யோசுவாவிடம் தேவன், "திடமனதாயிரு, திகையாதே, கலங்காதே," என்றார். ஆபிராமிடமும் தேவன், "நீ பயப்படாதே, நான் உனக்குக் கேடகமும், உனக்கு மகா பெரிய பலனுமாயிருக்கிறேன்", எனப்பகர்ந்தார். தானியேலிடம் தேவதூதன், "தானியேலே, பயப்படாதே" என்றான். லூக்கா சுவிசேஷத்தில் தேவதூதன் சகரியாவிடம், "சகரியாவே, பயப்படாதே, உன் வேண்டுதல் கேட்கப்பட்டது," என்றும் மரியாளிடம், "மரியாளே, பயப்படாதே, நீ தேவனிடத்தில் கிருபை பெற்றாய்", என்றும் கூறினாள்.

ஆகவே நாம் கற்றுக்கொள்ளவேண்டிய பாடம் யாது? பயப்படாதே திடமனதாயிரு, திகையாதே. நாம் எதிர்நோக்கக் கூடிய எப்பேர்பட்ட பிரச்சனையானாலும் சரி, அதற்குமேல் பெரியவராக இருக்கிறவர் நம் தேவன். "நாம் வேண்டிக் கொள்ளுகிறதற்கும் நினைக்கிறதற்கும் மிகவும் அதிகமாய் நமக்குள்ளே கிரியை செய்கிற வல்லமையின்படியே அவர் செய்ய வல்லவர்" என்பதை அறிந்தவர்களாய், அவர் நமக்குச் சொல்லுகிற மாபெரும் விசுவாசத்தாண்டுதலைத் தாண்டுவதோடு, நம்மையே அவருக்கு அர்ப்பணிப்போமாக.

நாம் தேவனிடம் முழு அர்ப்பணிப்பைச் செய்வோமாக, இடையில் எதுவும் கிடையாது. எபிரேயரில் சொல்லியிருக்கிறபடி, "நம்முடைய நம்பிக்கையை அறிக்கையிடுகிறதில் அசைவில்லாமல் உறுதியாயிருக்கக்கடவோம். வாக்குத்தத்தம் பண்ணினவர் உண்மையுள்ளவராயிருக்கிறாரே" அரைமனதோடு கூடிய குறைந்த முயற்சியோடு கூடிய வாழ்க்கையை நாம்

தேவனுக்குக்கொடுக்கக்கூடாது. முழுவதும் ஆண்டவருக்கு அல்லது ஒன்றுமே ஆண்டவருக்கு இல்லை. நாம் தேவனுடைய இராஜ்யத்தில் இருக்கவேண்டுமென்று விரும்புகிறார். "பயப்படாதே சிறுமந்தையே, உங்களுக்கு ராஜ்யத்தைக் கொடுக்க உங்கள் பிதா பிரியமாயிருக்கிறார்," என இயேசுவானவர் நமக்கு கூறியிருக்கிறார். நாம் அதைச் சம்பாதிக்க முடியாது. அது தேவனுடைய ஈவு. ஆனால் தங்கள் முழு பலத்தோடும் அவருக்கு ஊழியம் செய்ய அர்ப்பணிக்காதவர்களுக்கு அவர் அதைக் கொடுக்கப்போவதில்லை, "உன் வழியைக் கர்த்தருக்கு ஒப்புவித்து, அவர்மேல் நம்பிக்கையாயிரு அவரே காரியத்தை வாய்க்கப்பண்ணுவார்."

- ராபர்ட் ஜே. லாயிட்

# கொரிந்துவிலுள்ள சபை

நம் சூழ்நிலைகள் பெரிதும் வேறுபடலாம். ஆனாலும் நமக்குப் பொதுவாக இருக்கக்கூடிய காரியங்கள் அநேகமுண்டு. நம் விசுவாசத்தின் அடிப்படைக் கொள்கைகளைப் பகிர்ந்து கொண்டு, அவற்றை நம் வாழ்க்கையில் வெளிப்படுத்த முயல்கிறோம். நம் சொந்த வாழ்க்கையிலும் சபை காரியங்களிலும், நம்மால் இயன்றவரை நம் ஆண்டவரின் போதனையைப் பயிற்சி செய்ய முனைகிறோம். உலகில் எங்கு சென்றாலும் நம் சகோதர சகோதரிகளோடு சொந்தம் பாராட்டும் உணர்வை உடனடியாகவே உணர்கிறோம். நமக்குப் பொதுவான விசுவாசம் உண்டு. சத்தியத்தோடு சேர்ந்த எண்ணங்களையும் கருத்துக்களையும் குறித்துப் பேசவும் கலந்துரையாடவும் விரும்புகிறோம். நம் ஆரம்பகால சகோதரர்களுக்காக நாம் நன்றியோடிருக்கிறோம். ஏனெனில் அவர்களால் நமக்கென ஒரு வரலாறும் அமைப்பும் உள்ளன. நாம் நம் ஆண்டவரை நினைவுகூரக் கூடும்போது, அப்படிக் கூடிவருகிறவர்கள் ஒரே விதமான பிரச்சனைகளும், எதிர்ப்பார்ப்புகளும் உள்ள ஒரே விதமான சமுதாயத்திலிருந்து வருகிறவர்களாயிருக்கிறோம். ஆகவேதான் கொரிந்துவில் ஒரு சபையை ஆரம்பிப்பதிலுள்ள பிரச்சனைகளைப் புரிந்துக்கொள்ள நம்மால் முடியவில்லை அல்லது புரிந்துகொள்ள சிரமப்படுகிறோம்.

முதல் நூற்றாண்டு சபையின் மக்களில் சிலர் ஒழுங்குக்கும் சட்டதிட்டங்களுக்கும் உட்பட்ட யூதமார்க்கத்தவர்கள். வேறு சிலர் கட்டுக்கடங்காத புறமதத்தின் மிதமிஞ்சிய காரியங்கள் கலாச்சாரத்திலும் வாழ்க்கை முறையிலும் ஆழ்ந்த அடிப்படை வேறுபாடுகள் கொண்ட இந்த மக்களோடு முதல் நூற்றாண்டு சபை முன்னேறத் தடுமாறியது. இப்படிப்பட்ட விதவிதமான மக்களைக் கொண்டு ஒளிவீசும் விளக்குத் தண்டை அமைத்து





அதைப் பாதுகாத்து வருவது பவுல் அப்போஸ்தலனுக்கு மாபெரும் சவாலாயிருந்தது. கொரிந்து சபை, வளர்ச்சியின் ஆரம்பப் கட்டத்திலிருந்தாலும், விதவிதமான ஜாதிகளாகவும் ஒன்றுக்கொன்று முரணான கலாச்சாரங்களுடையவர்களாகவும் இருந்தாலும், நம்மை விட வேறுபட்டவர்களாயிருந்தாலும், நம் சூழ்நிலையோடு அடிப்படை ஒற்றுமை உள்ளதாகவே இருக்கிறது. இன்று போல அன்றும் பாவத்தை எதிர்கொள்ள வேண்டியிருந்தது. நிலையற்ற ஆண்பெண்களால் சபை நிறைந்திருக்கும். நம் ஆண்டவரின் பார்வையில் பாவம் பாவம் தான். அது உள்ளத்துள் இருக்கும் பொருளாசை எனும் இச்சையாயிருந்தாலும் சரி, துணிகரமான திருடாக இருந்தாலும் சரி. பாவம் பாவமே.

## கொரிந்து பட்டணம்

புராதனமானதும் கெட்ட பெயர் கொண்டதுமான நகரம் கொரிந்து. அது ஒரு முக்கியமான வணிக மையமாகவும், ரோமாபுரியிலிருந்து கிழக்கே செல்வதற்கு ஒரு வாயிலாகவும் அமைந்திருந்தது. கொரிந்து ஒரு வணிக முக்கியத்துவம் வாய்ந்த நகரமாக இருந்தால், ஒரு ஜெப ஆலயம் ஆரம்பிக்கும் அளவிற்கு அங்கே யூதர்கள் போதுமான அளவிற்கு இருந்தார்கள்.

அகாயா மாநிலத்தின் தலைநகரமாகவும் ரோமர்களின் குடியேற்ற நகராகவும் இருந்ததால், பலவகை மக்களும் பல தேசத்தவர்களும் இருந்தார்கள். இவர்களில் சிலர் தற்காலிகமாக வந்து போகிறவர்கள்தாம். சுயத்தை திருப்தி செய்வதற்கெனவே அங்கு ராணுவத் தலைவர்கள், மாலுமிகள், வணிகர்கள் மற்றும் அடிமைகள் ஆகிய யாவரும் வாழ்ந்ததால், கொரிந்து பட்டணம் என்றாலே ஒழுக்கக் கேட்டிற்கும் பொல்லாப்புக்கும் பேர்போனது என்ற பழிச்சொல் நிலவியது.

ராஜ்யத்தின் விதையை விதைப்பதற்கு இதுவளமான இடமல்ல என நாம் நினைக்கலாம். ஆனால், மக்களை இழுத்துக்கொள்ளும் வல்லமையுள்ள வார்த்தையில் நம்பிக்கையுள்ள பவுல், துணிந்து வேண்டுமென்றே அங்கு

போவதைத் தெரிந்துக் கொண்டார். கொரிந்து பட்டணத்தில் விசுவாசிகள் சமூகம் ஒன்றை அமைத்துவிட்டால் இங்கு வந்து போகும் வண்டிகள் மற்றும் கப்பல்கள் மூலம் ரோம உலகமெங்கும் நற்செய்தியைப் பரப்பப் முடியும் என்பது அவருக்குத் தெரிந்திருந்தது.

### பிரிஸ்சில்லாவும் ஆக்கில்லாவும்

இந்தப் பின்னணியை மனதில் கொண்டு அப்போஸ்தலர் 18ஐ ஆராய்ந்து, அதில் காணப்படும் சில மனிதர் மற்றும் சம்பவங்கள் மூலம் பாடங்கள் கற்று கொள்வோம். “அதன்பின்பு புவல் அத்தேனே பட்டணத்தை விட்டு, கொரிந்து, பட்டணத்துக்கு வந்து, யூதரெல்லாரும் ரோமபுரியை விட்டுப் போகும்படி கிலவுதியராயன் கட்டளையிட்டபடியினாலே, இத்தாலியாவிலிருந்து புதிதாய் வந்திருந்த பொந்து தேசத்தானாகிய ஆக்கில்லா என்னும் நாமமுள்ள ஒரு யூதனையும் அவன் மனைவியாகிய பிரிஸ்கில்லாளையும் அங்கே கண்டு, அவர்ககளிடத்திற்குப் போனான். அவர்கள் கூடாரம் பண்ணுகிற தொழிலாளிகளாயிருந்தார்கள். தானும் அந்தத் தொழில் செய்கிறவனானபடியினாலே அவர்களிடத்தில் தங்கி, வேலை செய்து கொண்டுவந்தான். ஓய்வு நாள்தோறும் அவன் ஜெப ஆலயத்திலேயே சம்பாஷணை பண்ணி, யூதருக்கும் கிரேக்கருக்கும் புத்தி சொன்னான்.” அப். 18:1-4

ஈடு இணையற்ற பிரிஸிகில்லாளும் ஆக்கில்லாவும் சத்தியத்தினாலுண்டான அன்பை அப்போஸ்தலனுடன் பகிர்ந்து கொள்ளமுன் வந்தனர். அவர்கள் தங்கள் வீட்டை தாராளமனதுடன் பவுலுக்குத் திறந்து கொடுத்ததன் மூலம், அவபக்தி ததும்பும் அப்பட்டணத்தில், ஆதரவான ஆவிக்குரிய, தாபரிக்கும் இடத்தை அளித்தனர். இந்த அருமையான தம்பதியர் சபைக்கடுத்த செயல்களில் கொரிந்துவிலும் அதற்கப்பாலும் முக்கியமான ஊழியர்களாயினர். தைரியமும் வாக்குவன்மையும் கொண்ட அப்பொல்லோவை நற்செய்தியை முழுமையாகப் புரிந்துக்கொள்ள அவர்கள் எபேசுவில் வழி நடத்தியதிலிருந்து அவர்களின் தைரியம், திறன் மற்றும் முடிவும் செய்யும் ஆற்றலை நாம் காணமுடிகிறது. “அலெக்சந்திரியா பட்டணத்தில் பிறந்தவனும் சாதுரியவானும் வேதாகமங்களில் வல்லனுமான அப்பொல்லோ என்னும் பேர் கொண்ட ஒரு யூதன் எபேசு பட்டணத்துக்கு வந்தான். அவன் கர்த்தருடைய மார்க்கத்திலே உபதேசிக்கப்பட்டு, யோவான் கொடுத்த ஸ்நானத்தை மாத்திரம் அறிந்தவனாயிருந்து ஆவியில் அனலுள்ளவனாய்க் கர்த்தருக்கு அடுத்தவைகளைத் திட்டமாய்ப் பேசத் தொடங்கினபோது, ஆக்கில்லாவும் பிரிஸ்கில்லாளும் அவன் பேசுகிறதைக் கேட்டு, அவனைச் சேர்த்துக் கொண்டு, தேவனுடைய மார்க்கத்தை அதிக திட்டமாய் அவனுக்கு விவரித்துக் காண்பித்தார்கள்” (அப் 18:24,25)



அவர்கள் எவ்வளவு விலையேறப் பெற்றவர்கள் என்பதை ரோமருக்கு எழுதிய நிருபத்தில் காண்கிறோம். ‘‘கிறிஸ்து இயேசுவுக்குள் என் உடன் வேலையாட்களாகிய பிரிஸ்கில்லாளையும் ஆக்கில்லாவையும் வாழ்த்துக்கள். அவர்கள் என் பிராணனுக்காகத் தங்கள் கழுத்தைக் கொடுத்தவர்கள். அவர்களைப் பற்றி நன்யறிதலுள்ளவர்களாயிருக்கிறார்கள்.” (ரோமர் 16:3-5). அப்போஸ்தலனாகிய பவுல் கணவன் மனைவியாகிய அவர்களைத் தனியே பாராட்டிப் பேசுகிறார். ஏனெனில் அவருக்கும் புறஜாதிகளும் இவர்களது நற்கிரியையின் பலனைப் பெற்றிருக்கிறார்கள். அணியாக வேலை செய்வதற்கு முன்மாதிரியாக ஆக்கில்லா பிரிஸ்கில்லாவைப் பற்றி எழுதப்பட்டது நமக்கு உதவுகிறது. மட்டுமல்ல, தியாகத்திற்கும் தேவனுடைய ஊழியத்தில் விருந்தோம்பலுக்கும் அவர்கள் அருமையான முன்மாதிரிகள். இக்குணங்களையெல்லாம் நாம் பின்பற்றவேண்டும்.

### யுஸ்துவும் கிறிஸ்புவும்

இந்த அதிகாரத்தில், தைரியத்தைக் காட்டியதாகக் கூறப்படும் நபர்கள் யுஸ்துவும் கிறிஸ்புவும். பிரசங்கிப்பதற்குச் சரியான இடமாக அமைந்த தன் வீட்டைப் பிரசங்கம் செய்வதற்கென பவுல் பயன்படுத்த இடங்கொடுத்தவன் யுஸ்து. பக்கத்திலிருந்த ஜெபாலயத்தலைவனாகிய கிறிஸ்பு இரட்சிக்கப்படுவதற்கு ஊக்கியாக செயல்பட்டவனும் யுஸ்து தான். அந்த நாட்களில் நற்செய்தியை எதிர்த்த யூதர்களைக் கண்டித்துப் பேசி, இனி புறஜாதிகளிடம் செல்ல இருப்பதாகப் பவுல் கூறியதால் மூர்க்கமடைந்த யூதர்கள் இவர்கள் இருவரையும் துன்புறுத்தியதை ஏற்றுக்கொண்டார்கள். அச்சூழ்நிலையில் எந்த நேரமும் துன்பம் விளையக்கூடியதாயிருந்தது. அப்பொழுது பவுலுக்கு நிச்சயத்தைத் தரும் வார்த்தைகள் தேவனிடமிருந்து வந்தன. “இராத்திரியிலே கர்த்தர் பவுலுக்குத் தரிசனமாகி: நீ பயப்படாமல் பேசு, மவுனமாயிராதே, நான் உன்னுடனே கூட இருக்கிறேன். உனக்குத் தீங்கு செய்யும்படி ஒருவனும் உன்மேல் கைபோடுவதில்லை. இந்தப் பட்டணத்தில் எனக்கு அநேக ஜனங்கள் உண்டு.” (அப். 18:19,10)

அறியாமையுள்ளதும் அவபக்தி நிறைந்ததுமான கொரிந்து பட்டணத்தில் தேவ வார்த்தையின் மறுரூபமாக்கும் வல்லமையினால் இரட்சிப்பிற்கான சாத்தியக்கூறுகள் இருந்ததென்பது தேவனின் மனதுருக்கத்தைக் காட்டும் அற்புதமானதொரு எடுத்துக்காட்டு.

பிரசங்கம் செய்தது கனி தந்தது. “அநியாயக்காரர் தேவனுடைய ராஜ்யத்தைச் சுதந்தரிப்பதில்லையென்று அறியீர்களா? வஞ்சிக்கப்படாதிருங்கள். வேசிமார்க்கத்தாரும், விக்ரகாராதனைக்காரரும், விபசாரக்காரரும்

சுயபுணர்ச்சிக்காரரும், ஆண்புணர்ச்சிக்காரரும், திருடரும், பொருளாசைக்காரரும், வெறியரும், உதாசீனரும், கொள்ளைக்காரரும் தேவனுடைய ராஜ்யத்தைச் சுதந்தரிப்பதில்லை. உங்களில் சிலர் இப்படிப்பட்டவர்களாயிருந்தீர்கள். ஆயினும் கர்த்தராகிய இயேசுவின் நாமத்தினாலும், நமது தேவனுடைய ஆவியினாலும் கழுவப்பட்டீர்கள். பரிசுத்தமாக்கப்பட்டீர்கள், நீதிமான்களாக்கப்பட்டீர்கள்" (1கொரி 6:9-11). தேவனுடைய இரக்கத்தின் பெரிதான அளவைப் பற்றி மட்டுமல்ல அப்போஸ்தலனாகிய பவுலைப் பற்றியும் இந்த வேத பகுதி பேசுகிறது. அவர் ஒரு காலத்தில், இப்படிப்பட்ட மக்களோடு எந்தத் தொடர்பும் வைத்துக்கொள்ளாத பரிசேயனாயிருந்தார். இப்பொழுதோ தேவகுமாரனால் அதிகாரப்பூர்வமாய் நியமிக்கப்பட்ட தூதுவனாக கொரிந்து பட்டணத்தின் சூழ்நிலையில் தன்னையே முற்றிலும் ஈடுபடுத்தி, கேட்பவர் எல்லாருக்கும் நற்செய்தியைக் கொடுத்தார்.

**சொஸ்தனே மனமாற்றம்மடைதல்**

துக்ககரமான செய்தி யாதெனில், பவுலின் சொந்த ஜனத்தாரில் பெரும்பாலானோர் சத்தியத்திற்குத் தங்கள் இருதயங்களை அடைத்துக் கொண்டவர்களாய், துணை ஆளுநரிடம் அவர் தவறிழைத்தவர் எனக்குற்றஞ்சாட்டினர். அவர்கள் கூறிய குற்றச்சாட்டுகளையெல்லாம் கல்லியோ ஒன்றுமில்லை யென்றாக்கி விட்டதால், சலிப்படைந்த யூதர்கள் ஜெப ஆலயத்தில் கிறிஸ்புவுக்கு அடுத்து தலைவனாக வரவேண்டிய சொஸ்தனேயைப் பிடித்து அடித்தார்கள். (அப். 18:17).

அவனை அவர்கள் அடித்ததற்கான சரியான காரணம் தெளிவாயில்லை. ஒருவேளை பவுலுக்கு விரோதமாகக் கொண்டு வந்த நியாயாசனத்தில் குற்றம் சாட்டும் திட்டத்தை சொஸ்தனே கூறியிருக்கலாம். காரணம் எதுவாக இருந்தாலும், அந்தத் தருணத்தில் பவுல் நல்ல சமாரியனாக நடந்துகொண்டு, அடிபட்ட மனிதன் இரட்சிக்கப்படுவதற்குக் காரணமாயிருந்திருக்கலாம். பிறிதொரு நாளில் பவுல்தன் நிருபத்தில், "தேவனுடைய சித்தத்தினாலே இயேசு கிறிஸ்துவின் அப்போஸ்தலனாகும்படி அழைக்கப்பட்டவனாகிய பவுலும், சகோதரனாகிய சொஸ்தனேயும்," என்று எழுதினார். (1கொரி 1:1).

அப்போஸ்தலர் 18ல் கூறப்பட்டுள்ள கொரிந்துவில் பவுலின் கடைசி செயல்பாடுகளிலும் கொரிந்தியருக்குப் பவுல் எழுதிய நிருபத்திலும் சொஸ்தனே எனும் மனிதனைப் பற்றிக் கூறியிருப்பது நம் சிந்தனைக்குரியது. சொஸ்தனே என்ற பெயருக்கு இரு அர்த்தங்கள் உண்டு :- இரட்சித்தல், பலப்படுத்துதல். பவுலைப் பின்பற்றியவர்கள் காயமடைந்த சொஸ்தனேயைப் பராமரித்திருந்தார்களெனில், முடிவை நம்மால் கணிக்க முடியும். இந்தக் கருணை நிறைந்த செய்கையால் அவன் கிறிஸ்துவிடம் திரும்பினான்.



**இரட்சிக்கப்பட்டு பலப்படுத்தப்படுதல்**

முதல் நூற்றாண்டு சபைகள் வளர்ச்சியில் முற்றிலும் வேறுபட்ட ஒரு நிலையில் இருந்தாலும், அவைகளிலிருந்து நாம் படிக்கும் பாடங்கள் இன்றும் ஏற்றவையாகவே இருக்கின்றன. பாவம், விக்கிரகாராதனை என்ற சேற்றில் கிடந்த மக்களுக்கு நற்செய்தியைப் பிரசங்கிக்கப் பவுல் மனதார விரும்பியதில் உண்மைத்தன்மை மற்றும் தாழ்மை காணப்படுகிறது. ஆக்கில்லா, பிரிஸ்கில்லாளுடைய வேலை, அன்பு தியாகம் மற்றும் விருந்தோம்பலினால் பவுல் பெரிதும் உற்சாகமும் ஊக்கமும் பெற்றிருப்பார். யுஸ்து மற்றும் கிறிஸ்புவின் விசுவாசத்தினால் களிப்படைந்திருப்பார். ஆனால் நாம் கற்றுக்கொள்ளும் மிக வல்லமையான பாடம் என்னவென்றால், பாவிக்கு ஒரு நொறுங்குண்ட ஆவி மட்டும் இருக்குமானால், தேவனுடைய மன்னிக்குங் கிருபையால் மூடப்படமுடியாத அளவுக்கு எந்த பாவமும் அவ்வளவு பெரியதல்ல. சொஸ்தனேயின் விஷயத்தில் போல, அடிக்கப்பட்டதோடு சிலுவையில் நமக்காக அறையுண்டாரே, அவர் மூலமாய் கர்த்தர் நம்மைக் கரம் நீட்டி இரட்சிக்கவும் பலப்படுத்தவும் கிருபை காட்டுவார்.


**- ஜோயல் தோர்ப்**

# எலும்பைப் பற்றி....

மனித உடலின் பாதுகாப்பு அமைப்பு, பரிணாமக் கொள்கைக்கு சவால் விடும் விதத்தில் அமைந்துள்ளது. ஆகவே, அதன் உட்பொருளை அறிந்து கொள்ள சற்று நேரம் எடுத்துக் கொள்வது நலம் பயக்கும். இரத்தம் உறைவதைத் தடுக்கும் அமைப்பு பல தலைமுறைகளாக, சிறிது சிறிதாக வளர்ந்தது எனக் கூறுவது சரியல்ல. முதல் நாளிலிருந்தே தான் நம் உடலினுள் இரத்தம் உறையாமல் செய்யும் அமைப்பு இருந்து வந்துள்ளது.

அநேகர் ஏதோ ஒரு விபத்தில் தங்கள் எலும்பு முறிந்ததால் சொல்லொணா வேதனைக்குள்ளாகிறார்கள். சில சமயங்களில் அதனால் மரணம் ஏற்படுவதற்குக் கூட வாய்ப்பு உண்டு. முறிந்த எலும்புக் கூடு முற்றிலும் சுகமாகும் வரை, அந்த எலும்பு அசையாமல் இருக்க வேண்டும். கை அல்லது கால் எலும்பு முறிந்தால் ஆறு வாரத்திற்கு வேலை செய்யாமல் ஓய்வெடுக்க வேண்டும்.

உடைந்த எலும்பு கூடாவிடில் ஏற்படக்கூடிய பயங்கரமான விளைவுகளைக் கற்பனை செய்து பாருங்கள். உங்கள் கால் எலும்பு முறிந்து விட்டதாக எண்ணிக்கொள்ளுங்கள். நம் முன்னோர்களாகிய ஆதி மனிதர்கள் வேட்டையாடவோ, உணவு தேடவோ முடியாமல், நடக்கவோ ஓடவோ முடியாமல், வனவிலங்கிற்கு இரையாக வேண்டியிருக்கும்.




ஆனால், ஆச்சரியமான விஷயம் என்னவென்றால் ஒரு உடைந்த எலும்பு ஆறுவாரத்திற்குள் தானாகவே மிகச் சிறப்பாகத் தன்னைச் செப்பனிட்டுக் கொள்ளக்கூடும். ஒன்றிரண்டு ஆண்டுகள் சென்றபின், கை தேர்ந்த நிபுணனாலும் கூட எலும்புமுறிந்த இடம் எது என்று எளிதில் காணமுடியாத அளவுக்கு புதிதாக வளர்ந்த எலும்பு இருக்கும். மயிரிழை போன்றதொரு மெல்லியகோடு தான் காணப்படும்.

எலும்பு முறிவு ஏற்பட்டவுடனேயே, அப்பகுதியில் எலும்புப் பொருளை உருவாக்கும் ஆஸ்டியோ பிளாஸ்ட்டுகள் என்ற செல்கள் வருகின்றன. இரத்த ஓட்டத்திலிருந்து கால்சியம் சத்துக்களை எடுத்துக்கொண்டு வளையங்களாகத் தங்களை அமைத்துக் கொள்கின்றன. கடினமான கால்சியம் சல்பேட்டைச் சுரந்து வளையங்களை ஒன்று சேர்க்கின்றன. முறிவு ஏற்பட்ட இடத்தின் மேலும் கீழுமாக காலஸ் (Callus) என்ற கெட்டியான எலும்பு நீண்டு வளருகிறது. இது உருளைக்கிழங்கை விழுங்கிய நெருப்பு கோழியின் கழுத்துப்போல இருக்கும். இப்பொழுது எலும்பு செல்களின் பெருக்கம் நின்றுபோகிறது. இரத்தக் குழாய்களும் திசுநார்களும் தத்தம் புதுப்பிக்கும் வேலையில் ஈடுபடுகின்றன. இப்போது எலும்பு தின்னி ஆஸ்டியோகிளாஸ்ட்டுகள் தடித்த காலஸ் பகுதியை மெல்லியதாக்குகின்றன. கடைசியில் எலும்பு தன் பழைய வடிவத்தையும் வலிமையையும் பெறுகிறது.

நம்புதற்கரிதான ஆனால் திறம்பட செயலாற்றும் அமைப்பாக அல்லவோ இருக்கின்றது. விபத்தில் மாட்டிக்கொண்ட ஒவ்வொரு முறையும் மகிழ்ந்து தானாகவே தன்னைப் பழுதுபார்த்துக் கொண்டால் எவ்வளவு நன்றாயிருக்கும். நம்முடைய எலும்புகள் தங்களைத் தாங்களே பழுதுபார்த்துக் கொள்கின்றன. எலும்பு செல்கள் குறிப்பிட்ட இடத்திற்கு வந்து, பெருகுகின்றன. பின்னர் அப்படிப் பெருகுவதை நிறுத்தி எலும்பை சரியான அளவிற்கு மெல்லியதாக்குகின்றன.

இது எப்படி பரிணாமத்தின் மூலமாக சாத்தியமாகும்? இந்த பழுதுபார்த்துச் செப்பனிடும் அமைப்பு முதுகெலும்புள்ள முதல் உயிரியிலேயே இல்லாவிடில்,



அது செயலாற்ற முடியாமற்போய் இறந்து விடவேண்டியதாயிருக்கும். அதுவும் இவ்வமைப்பு வளர்ச்சி அடைய ஆயிரக்கணக்கான ஆண்டுகளல்லவா தேவைப்படும். திறனற்ற அமைப்பு பயனற்றது. எலும்பு செல்கள் உடம்பில் எங்கு வேண்டுமானாலும் எப்பொழுது வேண்டுமாயினும் ஒழுங்கற்று வளர ஆரம்பித்தால் மரணம் தான் விளையும். அந்த விலங்கினால் நடப்பதே சிரமமாயிருக்கும். சரியான இடத்தில் சரியான நேரத்தில் பழுதுபார்க்கும் அமைப்பு தன் வேலையைத் துவங்கினாலும், முடிக்கவேண்டிய சமயம் தன் வேலையை முடிக்காவிடில், காலஸ் பெரிதாகிக்கொண்டே போய், அவ்விலங்கு புற்றுநோயினால் இறந்துபோக வேண்டியதுதான்.

ஆக, சிருஷ்டிப்பை (படைப்பை) விசுவாசிப்பது தான் பொருத்தமானது. உடலில் வடிவமைப்பை அமைத்த வடிவமைப்பாளராகிய தேவன் அதை வலுவுள்ளதாக்கி, அதிர்ச்சியைத் தாங்குவதற்குத் தசை நார்களைச் சேர்த்து, தேவையான தாதுச்சத்துக்கள் உணவில் கிடைக்கும்படி செய்து, அவ்வப்போது முறிவு ஏற்பட்டால் அதைச் சரிசெய்து கொள்ளும் அமைப்பையும் உடலில் வடிவமைத்து விடுவதால் மரணம் தவிர்க்கப்படுகிறது. “நான் பிரமிக்கத்தக்க அதிசயமாய் உண்டாக்கப்பட்டேன்,” என்று எழுதிய சங்கீதக்காரனுடன் சேர்ந்து நாமும் எதிரொலிப்போமா? (சங். 139:14)

# பாம்புகடித்தபின் பிழைத்தெழுவது எப்படி?

## (மணித்துளி சிந்தனை)

எங்கள் வீடு அமெரிக்காவின் மலைகளுக்குப் பின் உள்ளது. அந்த மலைகளில் சலங்கை ஒலிப்பாம்புகள் (Ralttle Snakes) அதிகம். ஒவ்வொரு ஆண்டும் அம்மலையடிவாரங்களுக்கு வரும் மக்களில் அநேகரை இப்பாம்புகள் கடித்துவிடுகின்றன. பெரும்பாலும், கால்களைவிட கைகளில் தான் கடித்துவிடுகின்றன. அது ஏன்? கைகள் அதன் விஷப்பற்களுக்கு அருகில் சென்றால் தவிர, அவைகளைக் கடிப்பதில்லை.

அடிக்கடி நாம் வாழ்க்கையில் கடிபடுகிறோம். ஏனெனில் எங்கே நம் கைகள் இருக்கக் கூடாதோ, அங்கே நம் கைகளை வைத்துவிடுகிறோம். மேலும் ஆபத்தினின்று விலகி ஓடுவதற்கு நம் கால்களைப் பயன்படுத்துவதில்லை.

பாம்புக்கடிகளிலிருந்து நாம் பல்வேறு பாடங்களைக் கற்றுக் கொள்ளலாம். ஒரு பாம்பு கடிக்கும்போது, வலிக்கான காரணங்கள் இரண்டு ஒன்று பாம்புக்கடி. அந்த இடம் வலிக்கிறது. பாம்பு கடித்ததற்கான அடையாளமும் இருக்கிறது.



இரண்டாவது காரணம் உங்கள் உடல் முழுவதும் ஓடிக்கொண்டிருக்கும் இரத்தத்தில் கலந்துவிட்ட நச்சு, விஷம் இதுதான் கொல்லுகிறது.

இதே போலத்தான் வாழ்க்கையிலும் நடக்கிறது. மோசமான காரியம் நிகழ்கிறது. ஆனால் சாவுக்கேதுவானது எதுவென்றால் நம்மைப் பாதிக்கக் கூடிய கோபமும் கசப்பும் தான்.

யாராவது நமக்குத் தீங்கு விளைவித்தால், அது ஒரு பாம்புக்கடி போல் நம்மைப் பாதிக்காது. பிறரால் கடிபடுவதை எப்போதுமே நம்மால் தவிக்க முடியாது தான். அது எதிர்பாராமல் நடந்து விடுகிறது. அந்த நிகழ்வில் நாம் வாங்கிய அடி மறைந்துவிடும். ஆனால் அந்த கோபம், கசப்பு உணர்ச்சிகளை இன்னும் நம்மில் தங்குவதற்கு அனுமதிக்கிறோமா இல்லையா என்பதை நாம் தான் தெரிந்து கொள்கிறோம். நாம் தான் நம்மிலிருந்து இந்த சாவுக்கேதுவான விஷயங்களை நம்மிலிருந்து முற்றிலும் நீக்கிவிடவேண்டும்.

பிறர் நம் மனதில் உணடாக்கிய காயங்களின் விளைவாக ஏற்பட்ட நல்லதல்லாத உணர்ச்சிகளைச் சரியாக்குவதற்கான மாற்று மருந்து ஏது**?** ஜெபம் தான். அதை எப்படிச் செய்ய வேண்டுமென்று ஆண்டவராகிய இயேசு கூறுகிறார். எப்படி என்று சொன்னது மட்டுமல்லாமல், அதையே சிலுவையில் செய்தும் காட்டினார். நமக்கு விரோதமாய்க் குற்றம் செய்கிறவர்களை நாம் மன்னிக்க வேண்டும். இந்த மன்னிப்பின் அர்த்தம் என்னவென்றால், அவர்கள் தவறு செய்தவர்கள். நமக்குத் தவறிழைக்கப்பட்டிருக்கிறது. ஆனால் நாம் அவர்களை மன்னிக்கிறோம்.

இது நமது ஆண்டவர் நமக்கு இடும் கட்டளை. இது ஒரு யோசனை அல்ல என்பதைக் தயவு செய்து கவனியுங்கள். "நான் உங்களுக்குச் சொல்லுகிறேன். உங்கள் சத்துருக்களைச் சிநேகியுங்கள். உங்களைச் சபிக்கிறவர்களை ஆசீர்வதியுங்கள். உங்களைப் பகைக்கிறவர்களுக்கு நன்மை செய்யுங்கள். உங்களை நிந்திக்கிறவர்களுக்காகவும் உங்களைத் துன்பப்படுத்துகிறவர்களுக்காகவும் ஜெபம் பண்ணுங்கள்.



நாமெல்லாருமே இந்த வார்த்தைகளை இதற்கு முன் கேட்டிருக்கிறோம். கேட்டது போதாது. நாம் அவைகளை உண்மையில் செய்ய வேண்டும். நம்மைத் தவறாக நடத்துபவர்களை ஆசீர்வதிக்கும்படி நம் பரமபிதாவினிடம் நாம் ஜெபிக்கவேண்டும்.

இந்தக் கட்டளை இவ்வளவு தெளிவாயிருந்தாலும், அநேகரால் இது கைக்கொள்ளப்படுவதில்லை. ஆகவே விஷம் அவர்களில் பரவிப் பாய்கிறது. என்பது தெளிவாய்த் தெரிகிறது. கடிவாங்கிய சிலர் தங்கள் காயங்களின் தழும்புகளைக் காட்டுவதிலும், தங்களைத் தாக்கியவர்களின் பயங்கரங்களை ஒன்றுவிடாமல் விளக்கமாகக் கூறுவதிலும் பிரியப்படுகிறார்கள். அந்த வலியை மீண்டும் தத்ருபமாய் விளக்கி அனுபவிப்பத்தோடு, தங்களுள் பரவிப் பாய்கிற விஷயத்தின் கடூரத் தன்மையையும் அதிகமாக்குகிறார்கள். பின்னர் தாங்கள் ஏன் இன்னும் மனக்காயம் ஆறாமல் வேதனைப்படுகிறார்கள். என ஆச்சரியமுறுகின்றனர்.

விடை தெளிவானது தான். அதை உதறிவிட்டு விடு. அதை மன்னித்துவிடு. அதைப்பற்றி நினைப்பதை நிறுத்து. கர்த்தர் உன் பாவங்களைத் தன் முதுகுக்குப் பின்னாக எறிந்துவிட வேண்டும் என நீ விரும்புவதைப் போலவே அதை உனக்குப் பின்னாக எறிந்து விடு, நாம் எறிந்துவிடா விட்டால், அவரும் நம் பாவங்களைத் தம் முதுகுக்குப் பின்னாக எறிந்துவிட மாட்டார்.

கர்த்தருடைய ஜெபத்தில் நாம் படித்துக்கொள்ளுகிற முக்கியமான பாடங்களில் ஒன்று என்னவென்றால், நாம் எந்த அளவுக்குப் பிறரை மன்னிக்கிறோமோ, அந்த அளவுக்கு நாம் மன்னிக்கப்படுவோம். நாம் அடிக்கடி இதைச் சொல்லுகிறோம். ஆனால் அப்படி சொல்வதற்கும் மேலாக நாம் செய்ய வேண்டும். அதாவது அப்படியே வாழ வேண்டும். அதன்படி வாழ, நம் சரீரத்தினின்று விஷத்தை நீக்கி விட ஒரே ஒரு வழிதான் உண்டு. நாம் யாரை மன்னிக்கவேண்டுமோ அவர்களுக்காக ஊக்கமாக ஜெபிப்பதுதான் அந்த வழி.

பாம்புக்கடியை நம்மால் எப்போதுமே தவிர்க்க முடியாதுதான். ஆனால் சலங்கை ஒலிப் பாம்புகளும் நம் எதிரிகளும் நம்மை அண்டாத படி இடைவெளி இருக்கும்படி நாம் பார்த்துக் கொள்ளவேண்டும். முடிந்தால், அந்த இடத்தை விட்டு ஓடவிட வேண்டும். நாம் கடிபட்டால், ஜெபத்தின் மூலம் அந்த விஷத்தை, நம்மை அழித்துவிடக்கூடிய, அடக்கி வைத்துள்ள நமது பகையை நம்மிலிருந்து வெளியேற்றிவிட வேண்டும்.

பிறர் நமக்கு கொடுத்துக் கொள்ளக்கூடிய பாம்புக்கடிக்குப் பின்னரும் பிழைத்து எப்படி வாழ்வதென கர்த்தராகிய இயேசு நமக்குக் கூறியுள்ளார். "மன்னியுங்கள், அப்பொழுது மன்னிக்கப்படுவீர்கள்."

# வினாவிடை

1. “இஸ்ரவேலரை கானானுக்குள் வழிநடத்திச் சென்றது யார்?
2. “சத்தியமாவது” என்ன என்று கேட்டது யார்?
3. “சொப்பனங்கண்டேன், சொப்பனங்கண்டேன்” என்றது யார்?
4. பவுல் அப்போஸ்தலனின் தொழில் யாது?
5. இயேசு யாரை “பூமிக்கு உப்பாயிருக்கிறீர்கள் எனக் குறிப்பிட்டார்”?
6. ‘‘தேவபக்தியுள்ளவனும், தன் வீட்டாரனைவரோடும் தேவனுக்குப் பயந்தவனுமாயிருந்து, ஜனங்களுக்கு மிகுந்த தருமங்களைச் செய்து, எப்பொழுதும் ஜெபம் பண்ணிக்கொண்டிருந்தவன்” யார்?
7. ஒவ்வொரு ஆண்டும் அன்னாள் சாமுவேலுக்கு என்ன கொண்டு வந்தாள்?
8. எசேக்கியேல் 21:27ல் ‘‘உரிமைக்காரனானவர்... அவருக்கே அதைக் கொடுப்பேன்” என எசேக்கியேல் கூறினான். அவர் யார்?
9. “நான் என் சகோதரனுக்குக் காவலாளியோ”? என்றது யார்?
10. புதிய ஏற்பாட்டில் எந்த புஸ்தகம் “எலியா என்பவன் நம்மைப்போல் பாடுள்ள மனுஷனாயிருந்தும் மழை பெய்யாத படிக்குக் கருத்தாய் ஜெபம் பண்ணினான். அப்பொழுது மழை பெய்யவில்லை” என்று கூறுகிறது?

விடைகள்: யோசுவா, பிலாத்து, கர்த்தருடைய நாமத்தில் பொய் சொல்லும் தீர்க்கதரிசிகள் (எரேமியா 23:25,26) கூடாரம் செய்தல் (அப். 18:2-3), அவருடைய சீஷர்கள் (மத்தேயு 5:13) கொர்நேலியு (அப். 10:1-2), ஒரு சட்டை (1சாமு. 2:19), இயேசு கிறிஸ்து, காயீன் யாக்கோபு.

# வாசித்துப் புரிந்துகொள்ளுதல்

**(பத்திரிக்கை 42ன் தொடர்ச்சி)**

## மேற்கோள் 9 : தேவன் ஆபிரகாமை அவன் விசுவாசத்தின் நிமித்தம் தெரிந்து கொண்டார்

எபிரேயா 11:8-16

எபி. 11:8 விசுவாசத்தினாலே ஆபிரகாம் தான் சுதந்தரமாகப் பெறப்போகிற இடத்திற்குப் போகும்படி அழைக்கப்பட்டபோது, கீழ்ப்படிந்து, தான் போகும் இடம் இன்னதென்று அறியாமல்





புறப்பட்டுப்போனான்.

எபி. 11:9 விசுவாசத்தினாலே அவன் வாக்குத்தத்தம்பண்ணப்பட்ட தேசத்திலே பரதேசியைப்போலச் சஞ்சரித்து, அந்த வாக்குத்தத்தத்திற்கு உடன் சுதந்தரராகிய ஈசாக்கோடும் யாக்கோபோடும் கூடாரங்களிலே குடியிருந்தான்;

எபி. 11:10 ஏனெனில், தேவன் தாமே கட்டி உண்டாக்கின அஸ்திபாரங்களுள்ள நகரத்துக்கு அவன் காத்திருந்தான்.

எபி. 11:11 விசுவாசத்தினாலே சாராளும் வாக்குத்தத்தம் பண்ணினவர் உண்மையுள்ளவரென்றெண்ணி, கர்ப்பந்தரிக்கப் பெலனடைந்து, வயதுசென்றவளாயிருந்தும் பிள்ளைபெற்றாள்.

எபி. 11:12 ஆனபடியால், சரீரஞ்செத்தவனென்று எண்ணத்தகும் ஒருவனாலே, வானத்திலுள்ள பெருக்கமான நட்சத்திரங்களைப் போலவும் கடற்கரையிலுள்ள எண்ணிறந்த மணலைப்போலவும், மிகுந்த ஜனங்கள் பிறந்தார்கள்.

எபி. 11:13 இவர்களெல்லாரும், வாக்குத்தத்தம் பண்ணப்பட்டவைகளை அடையாமல், தூரத்திலே அவைகளைக் கண்டு, நம்பி அணைத்துக்கொண்டு, பூமியின்மேல் தங்களை அந்நியரும் பரதேசிகளும் என்று அறிக்கையிட்டு, விசுவாசத்தோடே மரித்தார்கள்.

எபி. 11:14 இப்படி அறிக்கையிடுகிறவர்கள் சுயதேசத்தை நாடிப்போகிறோம் என்று தெரியப்படுத்துகிறார்கள்.

எபி.11:15 தாங்கள் விட்டுவந்த தேசத்தை நினைத்தார்களானால், அதற்குத் திரும்பிப்போவதற்கு அவர்களுக்குச் சமயங்கிடைத்திருக்குமே.

மரண வேளையிலும் தேவனுடைய வாக்குத்தத்தங்களின் மேல் விசுவாசம்.

எபி. 11:16 அதையல்ல, அதிலும் மேன்மையான பரமதேசத்தையே விரும்பினார்கள்; ஆகையால் தேவன் அவர்களுடைய தேவனென்னப்பட வெட்கப்படுகிறதில்லை; அவர்களுக்கு ஒரு நகரத்தை ஆயத்தம்பண்ணினாரே.

## மேற்கோள் 9 : இயேசு கிறிஸ்து ஆபிரகாமின் குமாரனும் இரட்சிப்பைக் கொண்டு வருவதற்கான வாக்குத்தத்தின் குமாரனுமாவார்

கலாத்தியர் 3:15-18

கலா. 3:15 சகோதரரே, மனுஷர் முறைமையின்படி சொல்லுகிறேன்; மனுஷர்களுக்குள்ளே உறுதிபண்ணப்பட்ட உடன்படிக்கையை

ஒருவனும் தள்ளுகிறதுமில்லை, அதினோடே ஒன்றையும் கூட்டுகிறதுமில்லை.

கலா. 3:16 ஆபிரகாமுக்கும் அவனுடைய சந்ததிக்கும் வாக்குத்தத்தங்கள் பண்ணப்பட்டன; சந்ததிகளுக்கு என்று அநேகரைக்குறித்துச் சொல்லாமல், உன் சந்ததிக்கு என்று ஒருவனைக்குறித்துச் சொல்லியிருக்கிறார், அந்தச் சந்ததி கிறிஸ்துவே.

கலா. 3:17 ஆதலால் நான் சொல்லுகிறதென்னவெனில், கிறிஸ்துவை முன்னிட்டுத் தேவனால் முன் உறுதிபண்ணப்பட்ட உடன்படிக்கையை நானூற்றுமுப்பது வருஷத்திற்குப்பின்பு உண்டான நியாயப்பிரமாணமானது தள்ளி, வாக்குத்தத்தத்தை வியர்த்தமாக்கமாட்டாது.

கலா. 3:18 அன்றியும், சுதந்தரமானது நியாயப்பிரமாணத்தினாலே உண்டானால் அது வாக்குத்தத்தத்தினாலே உண்டாயிராது; தேவன் அதை ஆபிரகாமுக்கு வாக்குத்தத்தத்தினாலே அருளிச்செய்தாரே.

## மேற்கோள் 10 : ஆபிரகாமுக்கு தேவன் அருளிய வாக்குத்தத்தங்கள் எப்படி நிறைவேறும் என்பதன் விளக்கம்

வெளிப்படுத்துதல் 21:1-5

வாக்குத்தத்தத்தின் இறுதி நிறைவேறுதல் அழகாய் காட்டப்பட்டுள்ளது.

வெளி. 21:1 பின்பு, நான் புதிய வானத்தையும் புதிய பூமியையும் கண்டேன்; முந்தின வானமும் முந்தின பூமியும் ஒழிந்துபோயின; சமுத்திரமும் இல்லாமற்போயிற்று.

வெளி. 21:2 யோவானாகிய நான், புதிய எருசலேமாகிய பரிசுத்த நகரத்தைத் தேவனிடத்தினின்று பரலோகத்தைவிட்டு இறங்கி வரக்கண்டேன்; அது தன் புருஷனுக்காக அலங்கரிக்கப்பட்ட மணவாட்டியைப் போல ஆயத்தமாக்கப்பட்டிருந்தது.

வெளி. 21:3 மேலும், பரலோகத்திலிருந்து உண்டான ஒரு பெருஞ்சத்தத்தைக் கேட்டேன்; அது: இதோ, மனுஷர்களிடத்திலே தேவனுடைய வாசஸ்தலமிருக்கிறது, அவர்களிடத்திலே அவர் வாசமாயிருப்பார்; அவர்களும் அவருடைய ஜனங்களாயிருப்பார்கள், தேவன்தாமே அவர்களோடேகூட இருந்து அவர்களுடைய தேவனாயிருப்பார்.

வெளி. 21:4 அவர்களுடைய கண்ணீர் யாவையும் தேவன் துடைப்பார்; இனி மரணமுமில்லை, துக்கமுமில்லை, அலறுதலுமில்லை, வருத்தமுமில்லை; முந்தினவைகள் ஒழிந்துபோயின என்று விளம்பினது.

வெளி. 21:5 சிங்காசனத்தின்மேல் வீற்றிருந்தவர்: இதோ, நான் சகலத்தையும் புதிதாக்குகிறேன் என்றார். பின்னும், அவர்: இந்த வசனங்கள் சத்தியமும் உண்மையுமானவைகள், இவைகளை எழுது என்றார்.



## மேற்கோள் 11 : ஆபிரகாம் உலகைச் சுதந்தரிப்பான்

ரோமர் 4:13

ரோமர் 4:13 அன்றியும், உலகத்தைச் சுதந்தரிப்பான் என்கிற வாக்குத்தத்தம் ஆபிரகாமுக்காவது அவன் சந்ததிக்காவது நியாயப்பிரமாணத்தினால் கிடையாமல் விசுவாசத்தினால் வருகிற நீதியினால் கிடைத்தது.

**கேள்வி 5.8 ............... ......................................... .................................. எதிர்கால அரசாட்சியைக் குறிக்கிறது என்பதை மேற்கோள்களிலிருந்து விளக்கம் கொடு ?**

வாக்குத்தங்கள் அனைத்தும் ஆபிரகாம் அந்நியனும் பரதேசியுமாய் வாழ்ந்த பூமியைக் குறிப்பன். அது மோட்சத்தைப் பற்றியது அல்ல. ஆனால் மோட்சம் போன்ற ஒரு இராஜ்யம். அதில் தேவன் தம் சாகா வரம் பெற்ற குமாரன் இயேசுவின் மூலம் ஆளுகை செய்வார். அது மோட்சம் போன்றது. ஏனெனில் அப்போது தேவனுடைய சித்தம் பரலோகத்தில் செய்யப்படுவது போல பூமியிலேயும் செய்யப்படும்.

**கேள்வி 5.7 தங்கள் மரணப்படுக்கையில் கூட ஆபிரகாமும் மற்றவர்களும் ஏன் தேவனின் வாக்குத்தங்களைத் தொடர்ந்து நம்பினார்கள் ? தேவன் அவனுக்கு வாக்களித்த சுதந்திரத்தை ஆபிரகாம் இப்போதும் பெற்றுக் கொள்வது எப்படி சாத்தியமாகிறது ?**

தேவனுடைய வார்த்தையின் மேல் ஆபிரகாமுக்கு முழு விசுவாசம் இருந்தது. தேவன் தம் வார்த்தையில் தவற மாட்டார் என்று அவனுக்குத் தெரியும். ஆகவே தேவன் வாக்குத்தத்தங்களை நிறைவேற்றுவதற்குத் தன்னை மரித்தோரிலிருந்து எழுப்ப வேண்டியதிருக்கும் என அவன் முடிவு செய்ய வேண்டியதிருந்தது. இயேசுதிரும்ப வந்து ஆபிரகாமை மரித்தோரிலிருந்து எழுப்பும் போது, தேவனுடைய ராஜ்யத்தில், வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட எல்லாவற்றையும் பெற்றுக்கொள்வான். ஆபிரகாம் மட்டும் அல்ல, விசுவாசத்தினால் ஆபிரகாமின் “மெய்யான சந்ததியான எல்லாருமோ” எழுப்பட்டு, பலனளிக்கப்படுவார்கள். இது நடக்கும் என்பதற்கு இயேசுவின் உயிர்த்தெழுதலே. நம் அச்சாரம்.